இணைப்பு I

[307-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 862க்கான விடையைக் காண்க,]

விடை—

(அ) சீருடன் அமைக்கப்பட்ட பால் பண்ணைகளில், உருக்கி மற்றும் புருசெல்லாசிஸ் நோய்களால் பாதிக்கப்படாவண்ணம் கால்நடை மந்தைகளை உருவாக்குவதும், பால் பண்ணைக்காரர்களுக்கு இது தொடர்பாகப் போதிக்கவும் ஏற்ற வகையில், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 1974ஆம் ஆண்டிலிருந்து சான்றளிக்கப்பட்டு முறைப்படி ஒப்புக்கொள்ளப்படத்தக்க கால்நடை மந்தைகளை உருவாக்கும் திட்டம் (accredited and certified herd project) செயற்பட்டு வருகிறது, இத்திட்டத்தின்கீழ் சோதனை செய்முறைகள், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி நோய்த்தடுப்பு துறைப் பணியாளர்களாலேயே நிகழ்த்தப்படுகின்றன. இத்திட்டம், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட இருக்கின்ற தீவிரக் கால்நடை உருக்கி நோய் அளவீடுக்கு, முன்னோடியாக அமைகிறது.

(ஆ) சான்றளிக்கப்பட்டு முறைப்படி ஒப்புக் கொள்ளப்படத்தக்க கால்நடை மந்தைகளை உருவாக்கும் திட்டத்தின்கீழ் ஆற்றிய பணிகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

விவரம்.	ஆண்டு.				
	1974	1975	1976	1977	1978
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1 உறுப்பினராக்கப்பட்ட பண்ணைகளின் எண்ணிக்கை.	2	3	9	6	3
2 பரிசோதிக்கப்பட்ட கால்நடைகள் ..	109	182	1,351	1,897	2,105
3 எலும்புருக்கி நோயினால் பாதிக்கப்பட்டவை.	4	5	103	49	56
4 செலவழிக்கப்பட்ட வேலை நேரம் (மணிக் கணக்கில்)	130	350	950	1,950	2,050
5 நோய் அறுதியீட்டுக்கு செலவழிக்கப்பட்ட தொகை (ரூபாயில்).	150	300	600	950	750
6 பணியாளர்கள் பயணப்படிச் செலவு (ரூபாயில்)	400	400	1,800	2,500	1,900
7 அமைப்பு மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்கள் செலவு (ரூபாயில்).	..	..	..	..	..

துறை அலுவலர்களே சோதனை செய்ய நியமிக்கப்பட்டனர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS